சுருக்கம்

பள்ளிக்கல்வி – ஆசிரியர் பொது மாறுதல் – ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி/மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் – 2011–2012–ஆம் கல்வி ஆண்டில் கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகின்றது.

பள்ளிக் கல்வித் (இ1) துறை.

அரசாணை (1டி) எண்.259

நாள்: 09.09.2011
திருவள்ளுவராண்டு 2042
ஆவணி 24

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (1D) எண்.131 பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள். 28.04.2010.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதந.க.எண்.30174/ஏ1/இ2/2011, நாள் 19.5.2011.

-----

**ஆணை:**

ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக வெளிப்படையான ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு பொதுமாறுதல் வழிகாட்டி விதிமுறைகள் தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்ற அரசின் முடிவிற்கேற்ப பள்ளிக்கல்வித் துறை கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களிடையே, 2011–2012ம் கல்வியாண்டில் பொது மாறுதல்கள் வழங்குவதற்கு கீழ்காணும் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது:–

1) மூன்று வருடங்களுக்கு மேல் அரசுப் பணியாளர்கள் ஒரே இடத்தில் பணியாற்றக் கூடாது என்ற பொதுவான ஆணை இருப்பினும், ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் இது கடைபிடிக்கப்படுவதில்லை. இந்தமுறை 2011–12 ஆம் கல்வியாண்டிலும் தொடரலாம். ஓர் ஆசிரியருக்கு மாறுதல் தருவதற்காக காரணம் ஏதுமின்றி மற்றொரு ஆசிரியரை மாறுதல் செய்யக்கூடாது.

2) (i) மாவட்டங்களில் அனைத்து வகை ஆசிரியர் பணிநிலையிலும் 01.06.2011 அன்று ஏற்படும் காலிப் பணியிடங்களின் விவரப் பட்டியலை முதலில் முழுமையான வகையில் தயார் செய்திட வேண்டும்.

(ii) தொடக்க/நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்துவகை ஆசிரியர்கள், அரசு உயர்/ மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்கள் மீது பெறப்பட்டுள்ள புகார்கள் அடிப்படையில் மாறுதல் வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்களுக்கு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் நிர்வாக அடிப்படையில் மாறுதல் ஆணைகளை முதலில் வழங்கிட வேண்டும். மாறுதல் வழங்கப்பட்ட பின்பு, அந்த புகார் உரிய அலுவலரால் விசாரிக்கப்பட்டு, புகாருக்கு முதல்நிலை ஆதாரம் உள்ள நிகழ்வுகளில், குற்றச்சாட்டுகள் தொடுக்கப்பட்டு, உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கோப்பில் இக்காரணத்தின் அடிப்படையிலேயே நிர்வாக மாறுதல் சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் பதிவு செய்யப்பட வேண்டும். உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் பள்ளிக்கல்வி இயக்குநர் மாறுதல் செய்ய வேண்டும்

(iii) மேற்கண்ட நடவடிக்கைகள் முடிவு பெற்றபின், பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்கள் குறிப்பிடும் நாட்களில் மாவட்டங்களில் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். கலந்தாய்வு நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே தொடக்கக் கல்வி அலுவலகம் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலகங்களில் காலிப்பணியிடங்களின் பட்டியல் ஒட்டப்பட வேண்டும். பள்ளிக் கல்வித் துறையின் இணையதளமான www.pallikalvi.in-லும் வெளியிடப்பட வேண்டும். மாவட்ட தேசிய தகவல் மைய இணையதளத்திலும் வெளியிடவேண்டும். கலந்தாய்வு குறித்த செய்தியினை அனைத்து செய்தித் தாள்களிலும் வெளியிடலாம். பொது மாறுதல்கள் சார்ந்த நெறிமுறைகளும் வெளியிடலாம்.

**3)** பொது மாறுதல் கோருவது சார்ந்த விண்ணப்பங்களை, குறிப்பிட்ட படிவத்தில் 3 நகல்களில் பூர்த்தி செய்து, பெற்று இரண்டு நகல்களில் முதன்மைக்கல்வி அலுவலர்/ மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்/ உதவி தொடக்கக்கல்வி அலுவலர், பரிந்துரை மற்றும் மேற்கையொப்பம் பெற்று, மாவட்ட மாறுதல் கோரும் ஆசிரியர்கள் சார்பாக ஒரு விண்ணப்ப நகலினை சம்பந்தப்பட்ட மாவட்டத்திற்கு அனுப்ப வேண்டும். ஒரு நகலினை சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் வழங்க வேண்டும். மாவட்டத்திற்குள் மாறுதல் கோரும் ஆசிரியர் சார்பான விண்ணப்பத்தினை சார்ந்த அலுவலகத்திலேயே உரிய பதிவேடுகளில் வரிசை எண் வழங்கி, பதிவிட்டு, பராமரிக்க வேண்டும். முறையான விண்ணப்பம் இல்லாமல் எந்த மாறுதல்களும் பரிசீலிக்கப்படக் கூடாது. மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பற்றிய விபரங்கள் (ஆசிரியர் பெயர், மாறுதல் கோரியுள்ள இடம்) அறிவிப்புப் பலகையில் வெளியிடப்பட வேண்டும்.

**4)** பொதுமாறுதல்கள் வழங்க கீழ்க்காணும் அலகின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

<u>(அ) தொடக்கக் கல்வித்துறையை பொறுத்தவரை</u>

(i) ஒன்றியத்திற்குள் / நகராட்சிக்குள் / மாநகராட்சிக்குள் முதலில் வழங்க பரிசீலிக்கப்பட வேண்டும்.

(ii) மாவட்டத்திற்குள் – ஒன்றியம் விட்டு ஒன்றியம் அல்லது மற்ற அலகுகளுக்கு பரிசீலிக்கப்பட வேண்டும்.

(iii) மாவட்டம் விட்டு மாவட்டம்.

<u>(ஆ) அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை</u>

(i) வருவாய் மாவட்டத்திற்குள்
(ii) மாவட்டம் விட்டு மாவட்டம்

(இ) உச்சநீதிமன்ற இடைக்காலத் தீர்ப்பாணையின்படி இடைநிலை ஆசிரியர்கள் மாநில முன்னுரிமைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளவர்களுக்கு மட்டும் <u>மாவட்ட மாறுதல்</u> கிடையாது. ஆனால் மாவட்டத்திற்குள் மாறுதல் கோரி, மாறுதல் விண்ணப்பம் அளித்து மாறுதல் பெறலாம்.

5) கடந்த கலந்தாய்வில் மாறுதல் பெற்ற ஆசிரியர்கள், மாறுதல் பெற்ற பணியிடத்தில் முழுமையாக ஒரு கல்வியாண்டு பணிபுரிந்திருக்க வேண்டும்.

கீழ்க்காணும் பிரிவினர்களுக்கு ஓர் ஆண்டு பணிக்காலத்திலிருந்து விலக்களிக்கலாம்.

(i) இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவி தங்களின் சொந்த பாதுகாப்பு கருதி மாறுதல் கோரும் போது.

(ii) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (Total Blindness)

(iii) மூன்று சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் அளவிற்கு மாற்றுத்திறனாளிகள்.

(iv) இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் மூன்றாண்டு காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்.

(v) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்

(vi) பணி நிரவல்மூலமாக பிற பள்ளிகளுக்கு சென்றவர்கள்

(vii) விதவைகள்

(viii) பதவி உயர்வு மூலம் பிற பள்ளிகளுக்குச் சென்றுள்ளவர்கள்.

6) ஒரு பணியிடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்ட நெறிமுறைகளைக் கையாண்டு முன்னுரிமை வழங்க வேண்டும் :-

(அ) இராணுவத்தில் பணிபுரியும் பணியாளர்களின் கணவன் / மனைவியர்.

(ஆ) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (Total Blindness)

(i) விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதிர் கன்னியர்

(ii) மூன்று சக்கர வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டு ஊன்றுகோல் துணையுடன் (Using Calipers) மெதுவாக செல்லக்கூடிய நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள்.

(iii) இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்.

(iv) கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள்

(V) மனவளர்ச்சி குன்றிய மற்றும் உடல்குறை பாடுடைய குழந்தைகளின் பெற்றோர்.

(இ) ஒரே இடத்தில் குறைந்தபட்சம் நான்காண்டுகள் அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள்

(ஈ) (i) கணவன் மனைவி இருவரும் பணியில் இருப்பவர்கள் எனில், தற்போது கணவர் பணிபுரியும் இடத்தில் இருந்து மனைவி பணிபுரியும் இடமும் அல்லது மனைவி பணிபுரியும் இடத்திலிருந்து கணவர் பணிபுரியும் இடமும் 30 கி.மீ. சுற்றளவுக்குள் இருக்கும்பட்சத்தில் அவர்களை தனித்தனியே வசிப்பதாக கருதி கணவன்/மனைவி பணிபுரிபவர்கள் (Spouse employed) என்ற அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டமாட்டாது.

(ii) கடந்த ஆண்டில், கலந்தாய்வில் கலந்து கொண்டு, கணவன்/மனைவி இருவரும் பணிபுரிபவர்கள் (Spouse Employed) என்ற தகுதியின் பேரில், மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் அதே தகுதியின் அடிப்படையில் மாறுதல் பெற, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுரிமை வழங்க இயலாது. மேற்கண்ட தகுதியின் பேரில் ஏற்கனவே மாறுதல் பெற்றவர்கள், மீண்டும் கலந்தாய்வில் கலந்து கொள்ள தடையில்லை. ஆனால் அவ்வாறு மாறுதல் கோருபவர்களின் மாறுதல் கோரிக்கைகள் பணியிட முன்னுரிமை (Station Seniority) அடிப்படையிலேயே பரிசீலிக்கப்படும்.

(iii) கணவன் மனைவி என்ற முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரும் பணியிடமானது, கணவன் அல்லது மனைவி பணிபுரியும் மாவட்டத்தில் உள்ள பணியிடங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

(iv) கணவன் மனைவி என்ற முன்னுரிமை, மைய அரசு, மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணிச்சான்று வழங்கப்பட

வேண்டும். இதில் மைய அரசு/ மாநில அரசு/பொதுத்துறை என்ற பாகுபாடு கிடையாது.

(உ) பிற ஆசிரியர்கள்.

7) சிறப்பு நிகழ்வு :கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது நோய் வாய்ப்பட்டு இறந்தாலோ அத்தகைய ஆசிரியர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளை கடைபிடிக்காமல் சிறப்பு நிகழ்வாக வழங்கலாம். எனினும், இது குறித்து அந்தந்த இயக்குநருக்கு ஒட்டுமொத்த அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

8) கலந்தாய்வு (counselling) முறையில் ஆசிரியர்கள் பொது மாறுதலின் போது கீழ்க்காணும் நிபந்தனைகளையும் அலுவலர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்:—

(அ) ஏற்கனவே புகாரின்மீது நிர்வாக காரணங்களுக்காக மாற்றப்பட்டவர்கள் இரண்டாண்டுகள் கழித்து விண்ணப்பிக்கலாம். ஆயினும், ஏற்கனவே பணியாற்றிய இடத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பிக்கக் கூடாது.

(ஆ) அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல்களை முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆணையிடலாம்.

(இ) மாறுதல் கோரும் ஆசிரியர்கள், மாறுதல் விண்ணப்பத்தில் எந்தப் பள்ளிக்கு மாறுதல் கோருகிறார் என்ற விவரத்தைக் குறிப்பிடக்கூடாது. மாவட்ட மாறுதல் கோரும் ஆசிரியரும் மாறுதல் கோரும் மாவட்டத்தின் பெயரினை மட்டுமே குறிப்பிட வேண்டும். மாறுதல் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்களை ஏற்கனவே குறிப்பிட்டபடி முன்னுரிமை பட்டியல் தயாரித்து அதன்படி ஒரு குறிப்பிட்ட நாளில் கலந்துரையாடலுக்கு (counselling) வரவழைத்து அவர்களிடம் தகுதியுள்ள காலிப்பணியிடங்களின் பட்டியலைக் கொடுத்து அவர்கள் விரும்பிய இடத்திற்கு மாறுதல் அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) மலைப்பாங்கான இடங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் செல்ல தயக்கம் காட்டுவார்கள் என்பதாலும், இதனால் இவ்விடங்களில் அமைந்துள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இல்லாமலிருக்க, மலைச் சுழற்சி முறை (Hill Rotation) அரசாணை (நிலை) எண்404 கல்வி, நாள் : 25.5.1994ன்படி மாறுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இதே முறை பின்பற்றப்படலாம். எனவே, பத்தி–4, 5 மற்றும் 6ல் குறிப்பிட்டுள்ள மாறுதல் நெறிமுறைகள் மலை சுழற்சி மாறுதல் முறைக்குப் பொருந்தாது.

(உ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் மாறுதல்களைப் பொருத்தவரை பள்ளிக் கல்வி இயக்குநரால் மாநிலம் தழுவிய பட்டியல் பேணப்படுவதால், அந்த காலிப் பணியிட விவரங்களை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திலும் அறிவிப்புப் பலகையில் வெளியிட வேண்டும். உயர்/மேல்நிலைப் பள்ளித்

தலைமையாசிரியர்களுக்கு மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநரால் பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும்.

(ஊ) மனமொத்த மாறுதல்களைப் பொருத்தமட்டில், பள்ளிக் கல்வி இயக்குநர் / முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோர் கலந்தாய்வு பொது மாறுதல் நடைபெறுவதற்கு முன்னர் மாறுதல் ஆணைகள் வழங்கிட வேண்டும்.

(எ) மனமொத்த மாறுதல் அடிப்படையில், மாறுதல் பெற்றவர்கள் மீண்டும் ஏற்கனவே பணிபுரிந்த பள்ளிக்கே மனமொத்த மாறுதலில் செல்ல அனுமதிக்கக் கூடாது. மனமொத்த மாறுதலுக்கு விண்ணப்பிப்பவர்கள், தற்போது பணிபுரியும் பள்ளியில் ஒரு கல்வி ஆண்டு முழுமையாகப் பணிபுரிந்திருக்க வேண்டும். கீழ்க்கண்ட காரணங்களுக்காக மனமொத்த மாறுதல் கோருபவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

(i) நடப்புக் கல்வியாண்டில் பதவி உயர்வு பெறும் நிலையில் உள்ள அனைத்துவகை ஆசிரியர்கள்.

(ii) நடப்புக் கல்வியாண்டில் ஓய்வுபெறவுள்ள அனைத்துவகை ஆசிரியர்கள்.

(iii) நிர்வாகக் காரணங்கள் அடிப்படையில் (புகாரின் பேரில்) மாறுதல்

செய்யப்பட்ட அனைத்துவகை ஆசிரியர்கள்.

(ஏ) தொடக்கக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள் கலந்தாய்வு மையங்களில் திடீர் சோதனை செய்து முறையான வகையில் மாறுதல் வழங்கும்பணி நடைபெறுவதை உறுதி செய்து கொள்ளவேண்டும். வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, மாறுதல் பணி குறித்த உரிய கால அட்டவணை தயாரிக்கப்பட்ட பின்பு இவ்விபரங்கள் குறித்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக செய்தித் தாள்களில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

(ஐ) உபரி ஆசிரியர் பணியிடங்களை பணி நிரவல் செய்த பின்னரே பொது மாறுதல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு பணி நிரவல் செய்யப்படும்போது தொடக்கப் பள்ளிகளில் குறைந்தது இரு ஆசிரியர்கள்இருக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

(ஒ) இந்த மாறுதலில் அலகுவிட்டு அலகு என்பது பள்ளிக் கல்வித்துறையின் கீழுள்ள அரசுப் பள்ளிகள், ஒன்றியப் பள்ளிகள், நகராட்சி பள்ளிகள் மாநகராட்சி பள்ளிகள் ஆகியவற்றினை மட்டுமே குறிக்கும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகள், பிற்படுத்தோர் நலத்துறை பள்ளிகள் போன்றவைகள் வேறு துறையின் கீழ் வருவதால் அவைகள் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் தனி அலகு எனக் கருத இயலாது.

(ஓ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களில், ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி / ஆரம்ப / நடுநிலைப் பள்ளிகளுக்கும், அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாறுதல் கோருபவர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய நகராட்சி ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் மற்றும் அரசு, நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களிலிருந்து மேற்கண்ட மூன்று மாநகராட்சி பள்ளிகளுக்கு மாறுதல் கோருபவர்கள் அரசாணை நிலை எண் 209 ப.க.துறை, நாள் 08.05.97ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன், அந்தந்த துறைத்தலைவர்களிடம் மறுப்பின்மைச் சான்று பெற்று, அதன்பேரில் பெறப்படும் விண்ணப்பத்தினை முறையே ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்கு தொடக்கக் கல்வி இயக்குநரும், உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளிக்கல்வி இயக்குநரும் பரிசீலனை செய்து மாறுதல் ஆணை வழங்கலாம்.

<u>நிபந்தனைகள்:</u>

i) அலகுவிட்டு அலகு மாறுதலில் செல்லும் ஆசிரியர் மாறுதல் பெறும் அலகில் பணி மூப்பில் மிகவும் இளையவராக வைக்கப்படுவார்.

ii) மாறுதலுக்கு பயணப்படி, நாள் படி வழங்கப்பட மாட்டாது.

iii) மாறுதலில் செல்லும் ஆசிரியர் அத்துறையின் நெறிமுறைகளுக்கு/சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

iv) மாறுதல் பெற்றவுடன் தாய்த்துறையிலிருக்கும் மீள்உரிமை எவ்வித முன்னறிவிப்புமின்றி துண்டிக்கப்படும்.

v) இந்நிபந்தனைகளை உள்ளடக்கிய உறுதி மொழிப் படிவத்தினை சம்மந்தப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து பெற்று அவர்களுடைய பணிப்பதிவேட்டில் உரியவாறு பதிவு செய்யப்படல் வேண்டும்.

**(ஔ)** கலந்தாய்வு நாளன்றே மாறுதல் ஆணை வழங்கப்பட வேண்டும்.

**9)** பள்ளிக் கல்வித்துறையில் உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளில் காலியேற்படும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டு, பட்டதாரி ஆசிரியர்களால் நிரப்பப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களுக்கான அலகு விட்டு அலகு மாறுதல் வழங்கும் நிகழ்வுகளில் பிற அலகுகளில் 6,7,8 வகுப்புகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் மேற்படி பணியிடங்களுக்குப் பொதுமாறுதல் பெற இயலாது.

**10)** பள்ளிக் கல்வித் துறையில் 6,7,8 வகுப்புகளில் காலியாகும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் ஒருமுறை பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் பெற்று பணியாற்றியவுடன் அப்பணியிடம் தொடர்ந்து பட்டதாரி ஆசிரியர் பணியிடமாகவே கருதப்பட வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படும் போது அரசாணை எண். 171 பள்ளிக் கல்வி (எம்2) துறை நாள் 18.8.2008 பத்தி–8ல் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைகருத்தில் கொண்டு விதிகளை மீறாமல் பணியிடம் நிரப்ப வேண்டும்.

11). பள்ளிக் கல்வித்துறையைப் பொறுத்தமட்டில், ஆசிரியப் பணியிட மாறுதல்கள் கலந்தாலோசனை (counselling) முறையில், அவ்வாசிரியர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி மாறுதல் செய்யப்படுவதால், "மாறுதல் பயணப்படி" போன்ற எந்தவித செலவினமும் அரசுக்கு ஏற்படக்கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

12). இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில் தெளிவான நடவடிக்கைகளை வகுத்து கள அலுவலர்களுக்கு அனுப்பும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி )**

த.சபிதா
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல்:–
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக்கல்வித் (ஜி/எம்/எச்.எஸ்./வரவு–செலவு) துறை, சென்னை–9.
செயலரின் தனிச்செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.